(33)
179411

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்

---

*[1982, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, ஒத்தோபர் மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*தபாற் செலவு : சதம் 50*

*விலை : சதம் 20*

# 1982 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம்

[1982, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 62/81
1475

1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடற்றொழில் வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1982 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச்சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) சட்டமானது முதன்மைச் சட்டவாக்கத்தின் [13 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவும் 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவும் தவிர்ந்த] ஏதேனும் ஏற்பாட்டில் "பணிப்பாளர்" என்னும் சொல் காணப்படும் இடங்களில் எல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக "செயலாளர்" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்கச் சட்டத்துக்கான பொதுவான திருத்தம்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் காணப்படும் "பணிப்பாளரின் அல்லது அரசாங்க அதிபரின்" என்னும் சொல்லமைப்புக்குப் பதிலாக "செயலாளரின் அல்லது செயலாளரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரின்" என்னும் சொல்லமைப்பை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளர் அல்லது எவரேனும் அரசாங்க அதிபர் அல்லது மேலதிக அரசாங்க அதிபர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "செயலாளர் அல்லது செயலாளரினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

'(1) "பணிப்பாளர்", "பிரதிப் பணிப்பாளர்" என்போர் பற்றிய வரைவிலக்கணங்களை விட்டுவிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) "மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகள்" என்பதன் வரைவிலக்கணத்தை, உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

"செயலாளர்" என்பது, அமைச்சரின் அமைச்சுக் செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கின்ற ஆள் எனப்பொருள்படும்;'.

ஏ 65023 — 7,000 (82/08)